**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**
**O.S. No. 78/2013**

சாட்சி : PW–1

பெயர் :புஷ்பா                                        தேதி: 05–12–2024

**<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

வாதி என்றால் என்ன என்று எனக்கு தெரியும். தாவா 4 சகோதரிகள் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம். வாதிகள் அனைவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். தாவா சொத்து ஆதியில் என் தாத்தா மாரிமுத்திற்கு பாத்தியப்பட்டிருந்தது. தாவா சொத்து என் தாத்தாவின் பூர்வீக சொத்து. அந்த சொத்து என் தாத்ததாவிற்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியம் என்று எனக்கு தெரியாது.

தாவா சொத்தின் சர்வே எண், மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. என் தாத்தா மாரிமுத்திடமிருந்து என் அப்பா, பெரியப்பா சுப்ரமணி, அத்தனாரி ஆகியோருக்கு சொத்து கிடைத்தது. அது எந்த வருடம், எந்த ஆவணத்தின் மூலம் என்று எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. எனக்கு தமிழ் படிக்க தெரியாது. யார்யாருக்கு எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

சொத்து பிரித்தாக நான் சொல்லும் சமயத்தில் எனக்கு வயது சுமார் 10. வாதிகளில் இந்திராணி தான் மூத்தவர். அதற்கு பிறகு அமுதவள்ளி, அதன்பிறகு நான். சொத்து பிரிந்தபோது 1ம் வாதிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. சொத்து பிரிந்து 5, 6 வருடம் கழித்து தான் அவருக்கு திருமணம் ஆனது. அந்த தேதி எனக்கு தெரியாது.

2ம் வாதிக்கு எப்போது திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. எனக்கு 1999 இல் திருமணம் ஆனது. ஆவணி மாதம் திருமணம் ஆனது. ஆங்கிலமாதம் தேதி எனக்கு தெரியாது. 4ம் வாதிக்கு எப்போது திருமணம் நடந்து என்று எனக்கு தேதி தெரியாது.

என் அப்பா பெயர் எல்லப்பன். எல்லப்பனுக்கு எவ்வளவு சொத்து கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியும். அவருக்கு 1–3/4 ஏக்கர் சொத்து கொடுத்தார்கள். அதன் சர்வே எண், செக்குபந்தி எனக்கு தெரியாது. அந்த 1–3/4 ஏக்கர் என்னென்ன வில்லங்கம் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். சொத்து விற்பனை செய்துள்ளார்கள். தேதி தெரியாது. எத்தனை வில்லங்கம் ஏற்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் வில்லங்கம் பார்த்தேன்.

வழக்கறிஞருக்கு வாதிகளான நாங்கள் 4 பேரும் சேர்ந்து தான் வழக்கு தாக்கல் செய்ய விவரம் சொன்னோம். வில்லங்கத்தை படித்து பார்த்துவிட்டு தான் வழக்கறிஞருக்கு தகவல் சொன்னோம். வில்லங்கத்தில் உள்ள நபர்களை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எல்லப்பனுக்கு பாகப்பிரிவினையில் சொத்து கொடுக்கப்பட்டதற்கான ஆவணத்தை பார்த்து தான் வழக்கு தாக்கல் செய்தேன். அந்த பாகபிரிவினை ஆணவத்தில் யார்யார் , எத்தனை பேர் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

அந்த பாகப்பிரிவினை பத்திரம் தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவண எண் எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன். நான் தாரமங்கலத்தில் குடியிருக்கிறேன். 1ம் வாதி ராசிபுரத்தில் வசிக்கிறார். இரண்டாம் வாதி ராசிபுரத்தில் வசிக்கிறார்.

திருமணம் ஆனதுமுதல் வாதிகளாகிய நாங்கள் தனித்தனியாக அவரவர்கள் கணவருடன் வசித்து வருகிறோம். எனது அப்பா 2013 இல் காலமானார். தேதி , மாதம் நினைவில்லை. எனது அப்பா வீட்டில் வைத்து தான் இறந்துவிட்டார். திருமணம் ஆனபின்பு வாதிகளாகிய நாங்கள் எனது அப்பாவுடன் பேச்சுவார்த்தையில் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் 4 பேரும் பேசிக்கொண்டுதான் இருந்தோம்.

எனது அப்பா இறப்பதற்கு முன்பு கடைசியாக எப்போது பார்த்தோம் என்றால் அவர் இறக்கும் போது நாங்கள் அவருடன் தான் இருந்தோம். வாதிகளான நாங்கள் 4 பேரும் தான் அவர் இறப்பதற்கு முன்பாக கடைசியாக அவரை அவர்வீட்டில் வைத்து பார்த்தோம். எனது அப்பா இறக்கும்வரை நல்லநிலமையில் இருந்தார் என்றால் சரியல்ல. 6, 7 மாதம் அவர் படுத்தபடுக்கையாக இருந்தார். நான் சொல்வது தவறு என்றும், எனது அப்பா இறக்கும்வரை நல்லமுறையில் தான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல.

எனது அப்பா இறந்து கொஞ்ச நாட்களில் பிரதிவாதிகள் சொத்தை விற்கபோவதாக கேள்விபட்டோம். யார் அந்த தகவலை சொன்னார்கள் என்ற விவரத்தை நான் நீதிமன்றத்தில் சொல்லவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது அண்ணுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. எனது அப்பா இறந்ததிற்கு பின்பு தான் தாவா சொத்து குறித்த வில்லங்கம் எனக்கு தெரிந்தது என்றால் சரிதான்.

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் தாவாசொத்தில் ஏற்பட்டுள்ள வில்லங்கள் எனக்கு தெரியவந்தது என்று நான் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்திருந்தால் வில்லங்கத்தில் உள்ள நபர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல.

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் அது தவறு தான். வாதிகளாகிய நாங்கள் 4 பேரும் படிக்கவில்லை. நாங்கள் சொன்னதை தான் எழுதியுள்ளார்கள். முதல்விசாரணை வாக்குமூலத்தில் வாக்குமூலம் எனக்கு படித்து காண்பிக்கப்பட்டதாக எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

தாவா என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியும். பாகம்கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்தபரிகாரமும் நாங்கள் கேட்கவில்லை. எனது அப்பா உயிருடன் , சுயநினைவுடன் இருந்தபோது எனது அப்பா சார்பதிவாளர் அலுவலகம் சென்று ஆவணம் எழுதிவைத்துள்ளாக பிரதிவாதிகள் சொல்லுகிறார்கள் என்று சொன்னால் ஆமாம். அப்படிதான் சொல்லியுள்ளார். எனது அப்பா கையொப்பம் செய்வார். எனது அப்பா தமிழ் கையெழுத்து போடுவார். எனது அப்பா ஆங்கிலத்தில் கையெழுத்து போடமாட்டார். எனது அப்பா படித்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. நான் அவரை கேட்டதில்லை.

தாவா சொத்தை விற்பனை செய்ததை தான் நாங்கள் வில்லங்கம் என்று சொல்லியுள்ளோம். மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு விவரம் ஏதும் வழக்குரையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் குடும்பத்தினாருக்கும், எங்களுக்கும் இன்றுவரை நல்லஉறவு முறை தான் உள்ளது. எனது அண்ணன் குடும்பத்தாரிடம் சொத்து கேட்டு பிரச்சனை செய்து அவர்களிடம் நாங்கள் நல்ல உறவு முறையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போது கூட திருமணத்திற்கு அழைத்தார்கள். யார்யார் பஞ்சாயத்து செய்துவைத்தார்கள் என்று அவர்கள் என் பெயர்களை நான் வழக்குரையில் சொல்லவில்லை.

பஞ்சாயத்து நடந்த இடம், தேதி யார் முன்னிலையில் நடந்தது என்ற விவரம் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பஞ்சாயத்து நடைபெற்றது உண்மையாக இருந்திருந்தால் மேற்படி விவரங்களை வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்யும் முன்பு நான் யாரிடமும் சொத்து கேட்டதில்லை என்றும், அது தொடர்பாக பஞ்சாயத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விவரங்கள் எதுவும் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்து தொடர்பான ஆவணங்களின் நகலை எந்த தேதியில் எடுத்தேன் என்று எனக்கு தேதி தெரியாது. அது என்ன ஆவணம் என்றும் எனக்கு தெரியாது. நான் நகல் வாங்கி பார்த்த ஆவணத்தில் யார்யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. செட்டில்மெண்டில் எனது அப்பா கையெழுத்து போட்டாரா அல்லது கைரேகை செய்தாரா என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் கையெழுத்து தான் போட்டுள்ளார்.

தவா சொத்து வில்லங்க சான்றிதழில் உள்ள நபர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனது அப்பா எந்தகாலத்திலும், தாவா சொத்தில் எங்களுக்கு பாகம் தருவதாக சொன்னதில்லை என்றால் தவறு. எனது அப்பா சொத்தில் பாகம் கொடுப்பதாக சொன்னார் என்று வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருக்கும்போது 1 முதல் 3 வாதிகளுக்கு திருமணம் நடைபெற்றது.

எனது அப்பா தான் எங்கள் 3 பேருக்கும் மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். 4ம் வாதிக்கு எனது அண்ணும், நாங்களும் சேர்ந்து தான் திருமணம் செய்து வைத்தோம். அந்த திருமணம் நடந்த தேதி, வருடம் எனக்கு தெரியாது. 1 முதல் 3 வாதிகளான எங்களுக்கு எனது அப்பா

நல்லமுறையில் சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைத்தார் என்றும், 4ம் வாதிக்கு எனது அண்ணன் நல்லமுறையில் சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது அப்பா இறப்பதற்கு முன்பு தாவா சொத்தை பொறுத்து எந்த ஏற்பாடும் செய்யவில்லை. தாவா சொத்தின் விவரங்கள் தெரியாமல் நாங்கள் பாகம் அடைந்துவிட்டோம் என்று வழக்கிற்காக பொய் சொல்லுகிறோம் என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருந்தபோதே தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்பாடு செய்துவிட்டார் என்றால் இல்லை. பொதுவாக தான் விட்டுசென்றுள்ளார்.

தாவா சொத்துக்களை பொறுத்து எனது அப்பா ஏற்பாடுகள் செய்துவிட்டு இறந்துவிட்டதால் தாவா சொத்துக்களில் எங்களுக்கு எந்த பாகமும் கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா அப்படி எதுவும் சொல்லவில்லை. எழுதவும் இல்லை. எனது முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி எண்.5 மற்றும் 6இல் சொல்லியுள்ள விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் 7 ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆவணம் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் ஆமாம்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- L. Kalaivani
III Additional District Judge,
Salem.